

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 13.03.2025 | தருமபுரி மேற்கு | பாலக்கோடு | இராமசாமி கோயில் அருகில், மொரப்பூர் பிரதான சாலை, காரிமங்கலம் | **கம்பம் செல்வேந்திரன்,** மு.கபில் |
| 2 | 13.03.2025 | தஞ்சாவூர் மத்திய | தஞ்சாவூர் | தலைமை தபால் நிலையம், ரயிலடி அருகில், தஞ்சாவூர் | **முனைவர் இரா.தி.சபாபதி மோகன்,** சி.பா.சின்மகி |
| 3 | 13.03.2025 | பெரம்பலூர் | பெரம்பலூர் | தேரடித் தெரு | வே.மதிமாறன், காருண்யா |
| 4 | 13.03.2025 | விருதுநகர் தெற்கு | திருவில்லிபுத்தூர் | பெரிய மாரியம்மன் கோவில் பின்புறம், திருவில்லிப்புத்தூர். | பேராசிரியர்.கான்ஸ்டன்டைன் ரவீந்தரன், வா.சந்தான லட்சுமி |
| 5 | 13.03.2025 | வேலூர் | காட்பாடி | சித்தூர் பேருந்து நிலையம் அருகில், காட்பாடி | **பேராசிரியர்.சுப.வீரபாண்டியன்,** ம.ஜ.சந்தீப் |
| 6 | 13.03.2025 | திருப்பூர் தெற்கு | மடத்துக்குளம் | தேவனூர்புதூர் | மதுரை எஸ்.பாலா, பிரபு |
| 7 | 14.03.2025 | பெரம்பலூர் | குன்னம் | குன்னம் பேருந்து நிலையம் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, ராமமூர்த்தி |
| 8 | 14.03.2025 | தஞ்சாவூர் தெற்கு | பேராவூரணி | திருச்சிற்றம்பலம் கடைவீதி, பேராவூரணி | வே.மதிமாறன், வியானி விஷ்வா |
| 9 | 14.03.2025 | விழுப்புரம் வடக்கு | மயிலம் | மயிலம் | ராஜகம்பீரன் அப்பாஸ், அப்துல் வஹாப் அதாயி |
| 10 | 14.03.2025 | விருதுநகர் வடக்கு | சிவகாசி மாநகரம் | சி.ரா.அரசு மேல்நிலைப்பள்ளி எதிரில், திருத்தங்கல் | **கம்பம் செல்வேந்திரன்,** செ.முகம்மது அன்ஸார் |
| 11 | 15/03/2025 | சென்னை வடகிழக்கு | திருவொற்றியூர் | பெரியார் நகர், சென்னை –19 | வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, செல்வமணி |
| 12 | 15.03.2025 | சென்னை தெற்கு | சோழிங்கநல்லூர் | நஞ்சுண்டார் சாலை, ஈஞ்சம்பாக்கம் கடற்கரை, மீனவர் பகுதி | மருத்துவர் யாழினி, க.ஹேமநாதன் |
| 13 | 15.03.2025 | நாமக்கல் கிழக்கு | இராசிபுரம் | பழைய பேருந்து நிலையம், இராசிபுரம் | வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, ம.மோகநிதி |
| 14 | 15.03.2025 | ஈரோடு தெற்கு | மொடக்குறிச்சி | நால்ரோடு சந்திப்பு, மொடக்குறிச்சி | **முனைவர் இரா.தி.சபாபதி மோகன்,** மு.கௌரிமனோகரி |
| 15 | 15.03.2025 | புதுக்கோட்டை தெற்கு | ஆலங்குடி | காந்தி பூங்கா அருகில், ஆலங்குடி. | வே.மதிமாறன், இரா.பிரீத்தி |
| 16 | 15.03.2025 | திருவள்ளூர் மேற்கு | திருவள்ளூர் | இரயில் நிலையம் | மில்டன், க.ரா.சந்தியா |
| 17 | 15.03.2025 | இராணிப்பேட்டை | இராணிப்பேட்டை | அண்ணா சிலை அருகில், ஆம்மூர் பேரூர் | துரை.சம்பத், வி.ஜாஸ்மின் சுவேதா |
| 18 | 15.03.2025 | நீலகிரி | உதகை | ஏ.டி.சி.சுதந்திர திடல் முன்பு, உதகை | ராஜகம்பீரன் அப்பாஸ், தஸ்லீமா நஸ்ரின் |
| 19 | 15.03.2025 | மயிலாடுதுறை | மயிலாடுதுறை | விஜயா திரையரங்கம் அருகில், மயிலாடுதுறை | இந்திரகுமார் தேரடி, சூர்யா |
| 20 | 15.03.2025 | விருதுநகர் வடக்கு | திருச்சுழி | கலைஞர் திடல், காரியாபட்டி | **திருச்சி சிவா எம்.பி.,** ஹ.ஹம்மத் நிஸ்ரின் |
| 21 | 15.03.2025 | ஈரோடு வடக்கு | அந்தியூர் | குளத்துக்கடை பேருந்து நிலையம், கூகலூர் | தி.செந்தில்வேல், செ.நந்தகோபால் |

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 09–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி



திருச்சி தெற்கு மாவட்டம், கிழக்கு மாநகரம், அரியமங்கலம் பகுதிக் கழகம் சார்பில், கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் கருத்தரங்கம் திருச்சியில் நடை பெற்றது. இதில் ரெங்கநாதன் வரவேற்றுப் பேசினார். ஏ.எம்.ஜி. விஜயகுமார் தலைமை தாங்கினார். அமைச்சரும் தெற்கு மாவட்ட செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, மாநகர செயலாளர் மு.மதிவாணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். வண்ணை அரங்கநாதன், கே. என்.சேகரன், சபியுல்லா செங்குட்டுவன், லீலாவேலு, மூக்கன் திவ்யா, நூர்கான், சந்திரமோகன், பொன்செல்லையா, சரோஜினி, தமிழ்ச்செல்வன் நீலமேகம், தர்மராஜ், ராஜ்முகம்மது, மோகன், மணிவேல், பாபு, சிவக்குமார் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



புதுக்கோட்டையில் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில், பணிநியமன ஆணைகளை, அமைச்சர் எஸ்.ரகுபதி, அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் வழங்கினர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, மேயர் திருமதி.திலகவதி செந்தில், மரு.வை.முத்துராஜா எம்.எல்.ஏ., மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், துணை மேயர் எம்.லியாகத் அலி மற்றும் அலுவலர்கள் பலர் உள்ளனர்.